உதவி தொழிலாளர் நல ஆணையர் 11—3—74-ம் நாள் மேலும் பேச்சு வார்த்தை நடத்தினர். அதுசமயம் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கவும், எஞ்சியுள்ள கோரிக்கைகளை பிற்பாடு நேரடி பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளவும் இருதரப்பாரும் ஒத்துக்கொண்டனர். சங்கம் குற்றப்பத்திரிகை தரப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கக்கூடாதென்று வற்புறுத்தியது. ஆனல் நிர்வாகம் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்கவில்லை.

பிறகு இருதரப்பாரும் நிர்வாகத்தின் டைரக்டர் திரு. மெஹ்ரா அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனல் நேரடி பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை. உதவித் தொழிலாளர் நல ஆணையர் மறுபடியும் இந்த இக்கட்டான நிலையை தீர்த்துவைக்க முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். தொழிலாளர் நல ஆணையாளர் அவர்கள் இதிலே ஈடுபடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லையென்று கருதி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு.

(அ) தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு குறித்து.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு குடம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் விற்கும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தைப் பற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது அவசர முக்கியமான காரியம் என்று குறிப்பிடப்பட்டு, ஏற்கனவே கவனிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர் பற்ருக்குறை ஏற்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள். அதிலே, ஊத்தங்கரை பேரூராட்சியில் 4 துளைக் கிணறுகள் வைக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதற்குக் குடிநீர் வாரியம் ஒப்பளிப்பு வழங்குவதற்காக உடனடியாக அனுப்புமாறு வாரியத்தின் தலைமைப் பொறியாளரைக் குடிநீர் வாரியம் கேட்டுக்கொண்டது

அத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்காகச் செலவு செய்ய ரூ. 32,000 தேவைப்படும் என்று தெரிவித்து, இப்பொழுது துளைக் கிணறுகள் போடுகிற வேலை நடைபெற்று வருகிறது. அதன் மூலமாக, உடனடியாகக் கவனிக்கப்பட்ட முறையில், ஊத்தங்குடி பகுதியிலே குடிநீர் தட்டுப்பாடு நீக்கப்படுகின்ற முறையில், துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்னையைப்பற்றி வேறு விவாதிக்க அவசியமில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஊத்தங்கரை ஒரு பேரூராட்சியாக மட்டுமல்லாமல், ஒரு தாலுகாவினுடைய தலைநகரமாகவும் இருக்கிறது. அங்கு, ஏற்கனவே 24 கிணறுகள் வெட்டப்பட்டு, மேற்கொண்டு ஆழப்படுத்த முடியாத நிலையிலே மிகவும் ஆழமாகவும் இருக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே அமைச்சரவர்கள் சொன்ன விளக்கத்தின்படி குழாய்க் கிணறுகளைப் போடுவதற்காக 32,000 ரூபாய் செலவைப் பஞ்சாயத்தே செய்ய வேண்டுமென்ற தீர்மானம் கோரப்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தப் பஞ்சாயத்தின் நிதிநிலைமைப்படி அந்த அளவிற்குப் பணம் செலவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது.

மேலும் 32,000 ரூபாய் செலவில் கையாலே ஆட்டக்கூடிய விசையைத்தான் ஏற்படுத்த முடியும். அவ்வளவு பெரிய நகரத்திற்கு அது போதுமானதாக இருக்காது. ஆகவே மோட்டார் வைக்கக்கூடிய குழாய்க் கிணறுகளை அமைத்தால் நன்றாக இருக்கும். மேலும் அந்தச் செலவு பூராவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது குடிநீர் வாரியம் நிறைவேற்றுகின்ற பணி. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக ஒரு செலவுக்கு அரசை அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த முறையில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவித்திருக்கிறார்கள்.

மோட்டார் வைக்க வேண்டுமென்றால், நல்ல அளவில் குடிநீர் கிடைத்து மோட்டார் மூலமாக இறைக்கின்ற அளவில் தண்ணீர் கிடைத்தால் இறைக்கும் முறை வரவேற்கத்தக்கதுதான். ஆனால் கிடைக்கின்ற தண்ணீரின் அளவு குறைந்திருந்தால் மோட்டார் வைத்தால் நீண்ட காலத்திற்குத் தண்ணீர் கிடைக்காது. பலநேரங்களில் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்படும். ஆகவே, தண்ணீர் கிடைக்கின்ற அளவைப் பொறுத்து மோட்டார் வைப்பதைப்பற்றிப்

பரிசீலிக்க வேண்டும். உடனடித் தேவைக்காக இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட காலத் தேவைக்காக ஒரு ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(ஆ) பல்லடம் லட்சுமி மில்லில் நடந்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் கொடுத்து ஒரு மாதமாகிவிட்டது. ஆகவே, இரண்டு மாதமாக இருக்கிறது என்பதை மூன்று மாதங்கள் என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடியிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திப்பதுமான நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத்திற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடியிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திப்பதுமான நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத்தற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பல்லடத்திலுள்ள லட்சுமி மில் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக 4—1—1974 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்: (i) ரீலிங் இலாகாவில் வேலைப்பளு அதிகரிப்பு, ( ) பத்தொன்பது தொழிலாளர்கள் விசாரணைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது.